சார்பு நீதிமன்றம், மேலூர்

EA 4/2023 in E.P. No.42/2022 in O.S 477/2014

பெயர் :செல்வராஜ்
தகப்பனார் பெயர் :S.மணி
கணவர் பெயர் :
வயது :44
கிராமம் :கள்ளிக்குடி
வட்டம் :கள்ளிக்குடி தாலுகா, மதுரை மாவட்டம்
தொழில் :நிலஅளவையர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

07.11.2024

ம.சா.3 முதல் விசாரணை:

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு 3வது சாட்சி. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுமார் ஒரு ஆண்டுக்கு முன்பு மேலூர் தாலுகா, அ.வலையப்பட்டி கிராமத்தில் சர்வே எண்.73/2B1A உள்ள பிளாட் எண்.6A, 6C, 6D, 6E புலத்தை நில அளவையர் ஆகிய நானும், கிராம நிர்வாக அலுவலர் உதவியோடு அளந்தோம். மேற்படி அளவையின் போது வழக்கறிஞர் ஆணையர் கொடுத்த வரைபடத்தை வைத்து பார்த்தோம். எங்களுடைய வருவாய் துறை ஆவணங்களில் புல எல்லை வரைபடத்தை ஒப்பிடும் போது, புலம் உட்பிரிவு செய்யப்படாமல் இருந்தது. ஆனால் புல எண் எங்களுடைய புல எல்லை வரைபடத்தோடு ஒத்து சென்றது. உட்பிரிவு செய்யப்படாமல் இருந்ததால் மேற்கொண்டு முழுமையாக புலத்தை எங்களால் அளந்து கொடுக்க இயலவில்லை. வழக்கறிஞர் ஆணையர் கொடுத்த வரைபடமானது நீதிமன்றத்தில் இருந்து கொடுத்ததாக குறிப்பிட்டார்கள். மேற்படி சர்வே எண்.73/2B1A என்பது எத்தனை

பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டிருந்து என்பது தற்போது நினைவில்லை. ஆனால் அளவையின் போது அது ஆவணங்களுடன் ஒத்து சென்றது. மேற்படி வீடும் ஆவணங்களோடு ஒத்து சென்றது. மேற்படி நில அளவையின் போது நீதிமன்ற ஆணையர் கொடுத்த வரைபடமானது, புலத்தில் வீட்டோடு ஒத்து சென்றது வருவாய் துறை ஆவணங்களில் புலம் உட்பிரிவு செய்யப்படாமல் இருந்ததால் அதை வைத்து எங்களால் அளக்க முடியவில்லை. மேற்படி அளவீடானது முழுமையாக முடிக்கப்பட்டதா என்றால் இல்லை. முழுமையாக சொத்து அளக்கப்படாததால் முழுமையாக அளந்த பின்னரே வருவாய் துறை ஆவணங்களோடு புலம் ஒத்துசெல்கிறதா என்பது தெரியவரும்.

குறுக்கு விசாரணை :

சாட்சியிடம் ம.சா.ஆ.1 ஆவணம் காட்டப்பட்டு சாட்சி அதை பார்வையிட்டு அதை அணுசரித்து தான் புலத்தை அளந்ததாக குறிப்பிடுகிறார். ம.சா-ஆ.1 ஆவணத்தை அணுசரித்து புலத்தில் அங்கு வீடு சரியாக இருந்தது. வருவாய் துறை ஆவணங்களோடு அந்த வீடு மற்றும் புல எண் உட்பிரிவு செய்யப்படாததால் முழுமையாக அளவீடு முடிக்கப்படவில்லை. பொதுவாக பிளாட் எண் குறிப்பிட்டு வீட்டடி மனை வாங்கப்பட்டால் அதன் அடிப்படையில் புலம் உட்பிரிவு செய்யப்படும் என்றால் சரிதான். பொதுவாக ஒரு புலம் உட்பிரிவு செய்யப்படாமல் இருக்கும் போது நேரடியாக சென்று புலத்தை நேரடியாக அளந்து லேஅவுட்டின் அடிப்படையில் சரிபார்த்து அதற்கு பின்பு உட்பிரிவு செய்து பட்டா கொடுப்போம். அவ்வாறு உட்பிரிவு செய்யப்படாமல்இருக்கும் போது நிலத்தை அளந்து அந்த இடத்தை சரிபார்த்து நீதிமன்ற ஆணையர் மூலம் இடத்தை நிர்ணயம் செய்து வரைபடம் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு வரைபடம் கொடுக்கப்படும் போது நீதிமன்ற ஆணையரிடம் வழக்கு சொத்தில் உள்ள விபரங்களை குறிப்பிட்டு சொல்லிவிடுவோம் என்றால் சரிதான்.

அவ்வாறு அளவீடு செய்த பின்னர் வரைபடத்தை நீதிமன்ற ஆணையரிடம் வழங்கிவிடுவது வழக்கம்.

மறுவிசாரணை : இல்லை.

Sd./M.Samundeeswari Prabha
Sub Judge
Melur